★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 20 சதம் ★ 'PHONE: 5563[illegible]

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆனி 6உ செவ்வாய் (19—6—56) ★ ★ வெளியூர்: ஆனி 7உ புதன் (20—6—56) [இதழ் 4

பாம்பு கடியாலேயே மாண்ட பாம்பு நிபுணர்!

மேற்கு ஜெர்மனி, ஜூன் 18—

ஏராளமான பாம்புகளைக் கொண்ட காட்சிச்சாலை வைத்து நிர்வகித்துவந்த பாம்பு நிபுணர் எர்னஸ்ட் பெண்டர் (61) ஒரு பாம்பு கடித்ததாலேயே மரணமடைந்தார்.

ஏற்கனவே அவரைப் பலமுறை பாம்புகள் கடித்துள்ளன; அப்போதெல்லாம், அவர் வைத்திருந்த ஒரு மருந்தி (சீரம்) னால் பிழைத்துக்கொண்டார். இப்போது பாம்பு கடித்தவுடன் அம் மருந்தை உட்செலுத்தினர்; எனினும் பழைய மருந்து என்பதால் அது வேலை செய்யவில்லை; எனவே அவர் உயிர் துறந்தார்.

பொது வேலை நிறுத்த எதிரொலி

கள்ளக்குறிச்சி வழக்கில் தீர்ப்பு

காமராசர் நிர்வாகத்திற்குக் கரிப்பூச்சு

போலீஸ் சில்லரை அதிகாரிகளின் விஷமம் அம்பலம்

11 தோழர்களும் குற்றவாளிகள் அல்லர்

"கடந்த பிப்ரவரி திங்கள் 20-ம் நாள் தமிழ்நாடு எங்கும் நடைபெற்றது போன்றே தென்னாற்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சியிலும், கூட்டணி சார்பில் பொதுவேலை நிறுத்தம் நடைபெற்றது. வேலை நிறுத்தத்தை முறியடிக்கும் நினைப்பில் சில அரசியல் 'கடுவன்'கள் விஷமத்திற்கு வித்திட்டன. அதை ஒரு புகலாகக் கொண்டு, போலீஸ் துறையினர், பொதுவாகக் கூட்டணித் தோழர்களையும் குறிப்பாக நமது கழகத் தோழர்கள் சிலரையும் கைது செய்து காவலில் வைத்தனர். பொதுமக்கள்மீது போலீஸ் துறை முறையின்றி துப்பாக்கிப் பிரயோகமும் செய்தது.

"கூட்டணித் தோழர்கள்மீது கலகமூட்டல், கொள்ளையிடல், அரசாங்க அதிகாரிகளைப் பணி செய்யவிடாமல் தடுத்தல் போன்ற குற்றங்களைச் சாட்டி வழக்கும் தொடுத்தது அரசாங்கம். ஆனால் வழக்கை விசாரித்த மாஜிஸ்திரேட் குற்றஞ் சாட்டப்பட்டிருந்த 11 தோழர்களையும் நிரபராதிகள் எனக் கண்டு, விடுதலை செய்துள்ளார்."

பிப்ரவரி 20-ந் தேதி தமிழகத்தில் நடைபெற்ற அர்த்தாலையொட்டி கள்ளக்குறிச்சியில் கைதாகி சிறை சென்ற தோழர்களின் மீது நடைபெற்றுக் கொண்டிருந்த வழக்கு இடையிடையே ஒத்திவைக்கப்பட்ட விபரங்களை நமது இதழில் தந்துள்ளோம்.

போலீஸ் தரப்பு சாட்சிகளாக சாதாரண போலீசார் முதற்கொண்டு சப்-இன்ஸ்பெக்டர், சர்க்கிள் இன்ஸ்பெக்டர், அரசாங்க டாக்டர்கள் ஆகியோர் உட்பட 21 பேர் வரை விசாரிக்கப்பட்டனர். 8–6–56 வரை விசாரிக்கப்பட்ட பின்னர் 12-6-56 அன்று குறுக்கு விசாரணை நடைபெற்று மீண்டும் 14-6-56 அன்று வழக்குத் தள்ளி வைக்கப்பட்டது.

14-6-56-ல், வழக்குத் தொடரப்பட்ட தோழர்கள் சன்ன கேசவலு உள்ளிட்ட 11 பேர்களும் வழக்கின் முடிவை எதிர்பார்த்து முன்கூட்டியே உளுந்தூர்பேட்டை முதல் வகுப்பு நீதிமன்றத்திற்குச் சென்றிருந்தனர். தோழர்கள் அழைக்கப்பட்டபின், நீதிபதியவர்கள் சாட்சிகளை விசாரித்து, வழக்கை ஆய்ந்து பார்த்ததில் 'தோழர்கள் குற்றவாளிகளல்ல' எனத் தீர்ப்பளித்தார்.

வழக்கின் முடிவு தோழர்களுக்கு வெற்றியைத் தேடித் தந்தது. தோழர்களின் சார்பில் வழக்கறிஞர்கள் டி. வ. தாத்தாச்சாரியார், டி. கே. டி. ஆகியோர் வாதாடினர்.

வழக்கறிஞர்களுக்குக் கோரிக்கை!

அகமதாபாத், ஜூன் 18—

தீவிர காங்கிரஸ் உறுப்பினர்களாயுள்ள வழக்கறிஞர்களை மது விலக்கு வழக்குகள், இலஞ்ச வழக்குகள், பொதுப் பண மோசடி வழக்குகள் ஆகியவற்றில் எதிரிகளாக இருக்கும் சமூக விரோத சக்திகள் சார்பில் முன்வராதிருக்குமாறு குஜராத் பிரதேச காங்கிரஸ் செயற்குழு கேட்டுக் கொண்டுள்ளதாம் அப்படி எந்த வழக்கிலாவது இத்தகு எதிரிகளின் சார்பில் வாதாட வேண்டிய நிலைமை ஏற்படின் பிரதேசக் காங்கிரசுக் குழுவின் அனுமதி பெறவேண்டுமென்று தீர்மானம் கூறுகிறதாம்.

'நாகர் விடுதலைக் கிளர்ச்சி வலுவடைகிறது'

'ஒவ்வொரு நாகனும் ஆயுதம் தாங்கிய படைவீரனுவான்'

'பற்பலவிதமான துப்பாக்கிகள் அவர்களிடம் உள்ளன'

'அரசாங்க அதிகாரிகள் கூறுவதற்கு மாருக நிலைமை உள்ளது'

நாகர்களால் பிடிபட்டு விடுபட்ட மக்கள் சபை உறுப்பினர் தகவல்

"நாகமலை நிலைமை மோசமாக இருக்கிறது; அதைக் குறைத்து மதிப்பிடுவதில் பொருள் இல்லை.

"நான் பார்த்த ஒவ்வொரு நாகநாட்டவனும் ஆயுதம் தாங்கிய ஒரு படைவீரனுகக் காட்சியளிக்கிருன். அவர்களிடம் நானுவித துப்பாக்கிகளும் இருக்கின்றன.

"திமாபூர்—இம்பால்சாலையில், கோகிமா முதல் கெய்ஜுமாவரையில் காணப்பெறும் நிலப்பரப்பு நாகர்வசம் சிக்கிக் கிடக்கிறது."

நாகமலை ஜாதியினரின் விடுதலைக் கிளர்ச்சியின் உண்மை நிலையை, நாகர்களிடம் கைதாகி, பின்னர், விடுபட்ட மக்கள்சபை உறுப்பினரான ஜோகேஸ்வர் சிங் என்பார் மேற்குறித்தவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது:—

'அசாம் அரசாங்கமும், இராணுவ நிலையங்களும், நாகர்களுக்கு எதிராக எடுக்கப்பட்டுவரும் இராணுவ நடவடிக்கைகள் வெற்றி பெற்று வருகிறதெனக் காட்ட பெரிதும் முயன்றுவருகின்றன; ஆனல், அங்குள்ள நிலைமையோ, அவைகளின் கூற்றுக்கு முழுதும் மாறுபட்டதாக இருந்துவருகிறது."

அகாலி தளத்தை அழிக்க காங்கிரஸ்-ரேர்வாலா சதி

காங்கிரஸ் சூழ்ச்சி படுதோல்வி

ஜூலை 8-ல் பஞ்சாப் முழுதும் கண்டன நாள்

அகாலி தளத்தின் அவசியம் பற்றித் தீர்மானம்

சீக்கியர்களின் தனிப் பெரும் அரசியல்—மத ஸ்தாபனமாக இருந்துவரும் அகாலி தளத்தைத் தன்னுடன் இணைக்க, காங்கிரஸ் முயற்சித்து வருகிறது.

அதற்காக, புதிய பஞ்சாப் மாகாணத்துடன் சேர்க்கப்படவிருக்கும பெப்சுவின் முதலமைச்சரும், அகாலி தளத்தின் செல்வாக்குளள தலைவர்களில் ஒருவருமான சர்தார் கியான்சிங்ரேர்வாலா என்பவருக்கு பதவி ஆசை காட்டி இருக்கிறது காங்கிரஸ்; அவரும் அதற்கு அடிமைப்பட்டு, ஏதேதோ காரணங்களைக் கூறி காங்கிரஸ் கட்சியுடன் அகாலிதளம் இணைந்துவிட வேண்டும் எனப் பேசி வருகிருர்.

சிலருக்குப் பதவி தருவது என்ற பெயரால், முடியுமானல் காங்கிரசுடன் அகாலிதளத்தை இணைத்துக்கொண்டு, அகாலிதளத்தை இல்லாமலே கொன்றுவிடுவது; பதவி ஆசையைக் காட்டி அகாலி தளத்தின இன்றைய பலத்தைக் குலைத்துவிடுவது;—ஆக, இரண்டில் ஏதாவது ஒன்றை அடைவது என்ற எண்ணத்தில், காங்கிரஸ் ரேர்வாலாவிற்கு பதவி போதை ஊட்டி வருகிறது.

ஆனல், அகாலிதளத்தின் தனிப் பெரும தலைவராக இருந்துவரும் மாஸ்டர் தாராசிங் அவர்களோ, ரேர்வாலாவின் முயற்சியைக் கண்டித்து, அத்தகைய கூட்டிற்கு இடமில்லை என்றும் வலியுறுத்துகிருர்.

அவர் விருப்பப்படி, சிரோமணி அகாலி தளத்தின் செயற் குழு கூடி, சீக்கியர்களின் மற்ற அரசியல் நலன்களை பாதுகாத்துவர மேற்படி தளம் தனிமையாக எப்பொழுதும்போல் இயங்கிவர வேண்டும் என்ற தீர்மானம் ஒன்றை ஏகமனதாக நிறைவேற்றி இருக்கிறது.

அதுவுமன்றி, பஞ்சாபிலுள்ள ஆரிய சமாஜிகளும், இந்துக்களும் சேர்ந்து செய்துவரும் மகா பஞ்சாப் கிளர்ச்சியைக் கண்டிக்கும் அறிகுறியாக, வருகிற ஜூலை திங்கள் 8-ம் தேதியைக் கண்டன நாளாக பஞ்சாப் முழுதும் கொள்ள வேண்டும் எனவும் அக்குழு தீர்மானித்து இருக்கிறது.

தலைவர்கள் வீடுகள் சோதனையிடப்பட்டதாம்!

லாகூர், ஜூன் 18—

எல்லை காந்தி கான் அப்துல் கபார்கான் சென்ற சனி இரவு கைது செய்யப்பட்ட பின்னர் பெஷாவரியிலுள்ள முக்கிய செஞ்சட்டைப் படைத் தலைவர்கள் பலருடைய வீடுகள் சோதனையிடப்பட்டதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

ரெவினியூ அமைச்சர் விலக விரும்புகிருர்

பம்பாய், ஜூன் 18—

பம்பாய் ரெவினியூ அமைச்சர் எம். எஸ். ஹிரே முதலமைச்சர் மொரார்ஜி தேசாயைச் சந்தித்து 45 நிமிடங்கள் உரையாடிக்கொண்டிருந்தார் என்றும், இதுபற்றி பத்திரிகையாளரிடம் அவர் எதுவும் கூறமறுத்துவிட்டார் என்றும், தெரியவருகிறது. ஹிரேயின் பதவியை ராஜிநாமாச்செய்ய முதலமைச்சரிடம் விருப்பம் தெரிவித்ததாகவும், இதற்கு காங்கிரஸ் மேலிடத்தின் அனுமதி கோர டில்லி செல்வார் எனவும் கூறப்படுகிறது.

சோவியத் விஞ்ஞானி கொள்ளும் நம்பிக்கை

லண்டன், ஜூன் 18—

1970-ம் ஆண்டிற்கு மேல் செவ்வாய் கிரகத்திற்கு முதல் 'ராக்கெட்'டை அனுப்ப முடியுமென்றும், செவ்வாய் கிரகத்தில் மனிதர்கள் இருக்கிருர்களென்றும் 1971-ம் ஆண்டில் அவர்களுடன் வானெலி, 'டெலிபோன்' 'டெலிவிஷன்' ஆகியவற்றின் மூலம் தொடர்புகொள்ள முடியும் என்றும் சோவியத் விஞ்ஞானி ஒருவர் மாஸ்கோ வானொலியில் பேசுகையில் கூறியுள்ளார் என அறிவிக்கப்படுகிறது.

'காங்கிரஸ் சரிவுக்கு காங்கிரசாரின் ஒழுக்கக் குறைவே காரணம்'

'அதிகாரத்தினலேயே காங்கிரசுக்கு பேராபத்து வந்திருக்கிறது'

'மற்ற கட்சிகளுக்கு இல்லாத வகையில் அரசாங்கத்திடம் ஆதரவை காங்கிரசார் எதிர்பார்க்கின்றனர்'

'அதிகாரிகள் காங்கிரசாருடன் இணைந்து செயல்படவேண்டுமென எதிர்பார்க்கக்கூடாது

காங்கிரஸ் கட்சியினர் போக்குபற்றி நேரு

நரோரா, ஜூன் 18—

"காங்கிரஸ் கட்சியினரிடை காணப்பெறும் ஒழுக்கக் குறைவே காங்கிரசின் பலத்தாழ்விற்குரிய அடிப்படை காரணமாகும்.

"ஜனநாயக ஆட்சியில், ஒரு அரசாங்கம், காங்கிரஸ் கட்சிக்குச் சலுகை காட்டுவதோ அதே நேரத்தில் ம. சோ. கட்சிக்கோ, கம்யூனிஸ்ட் கட்சிக்கோ வெறுப்பு காட்டுவதோ முடியாது"

—காங்கிரஸ் ஊழியர் மாநாட்டில் இந்தியப் பிரதமர் நேரு பேசும்பொழுது மேற்கண்டவாறு குறிப்பிட்டுவிட்டு மேலும் கூறினர்:—

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 19—6—'56 செவ்வாய்

என்ன நாணயமோ?

1957-ம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதியன்று அணா, அரையணா, காலணாக்களுக்கு இறுதிச் சடங்கு நடைபெற இருக்கிறது.

அந்த நாணயங்களுக்குப் பதிலாக 1, 2, 5, 10 என்ற தொகை அளவில் தனித்தனியாக 'நயா பைசா' நாணயங்கள் மக்களிடம் நடமாட வரப்போகின்றன.

'நயா பைசா' என்பதுதான் வரவிருக்கும் புதிய நாணயங்களுக்கு இப்பொழுது தரப்பட்டிருக்கும் சிறப்புப் பெயராகும். காலப்போக்கில் 'நயா' மறைந்துபோய் 'பைசா' மட்டும் வழக்கத்தில் நிலைத்து இருக்குமாம்.

'நயாபைசா' நடைமுறைக்கு வரும் நாள் முதற்கொண்டு மூன்று ஆண்டுகளுக்குள்ளாக 25, 50, 100 என்ற தொகை அளவு கொண்ட 'நயா பைசா' நாணயங்களும் வழக்கத்திற்கு வந்துவிடுமாம். அந்த இடைக் காலத்தில் இன்று புழக்கத்திலிருந்துவரும் நான்கணா, எட்டணா நாணயங்களும் மெள்ள மெள்ளத் தொலைக்கப்பட்டுவிடுமாம்.

மூன்று ஆண்டுகளுக்குள்ளாக புதிய தசாம்ச நாணய ஏற்பாடு வெற்றிகரமாக வழக்கத்திற்குக் கொண்டுவரப்பட்டு விடுமாம்.

எந்த ஒரு ஏற்பாட்டிலும் ஏதாவது குறைபாடு இருந்து வருவது போன்றே, இன்றுள்ள நாணய அமைப்பிலும் திருத்தம் செய்ய வேண்டிய குறைபாடு இருப்பது எதிர்பார்க்கக் கூடியதேயாகும். ஆனால், அத்தகைய குறைபாட்டிற்கு 'நயா பைசா' நாணய ஏற்பாடு உள்ளாகாமல் இருக்குமா என்பது இனித்தான் தெரிய வேண்டும்.

குறையுடையதானாலும் குறையற்றதானாலும், எதிர்கால அனுபவத்தில்தான், அது கண்டறியப்படும். ஆனால், இப்பொழுதுள்ள நாணய முறை மறைவதற்கும், புதிய 'நயா பைசா' நாணயமுறை முழுமை பெறுவதற்கும் குறிக்கப்பட்டுள்ள மூன்று ஆண்டு இடைக்காலத்தில், புதிய நாணயமுறை திணிப்பில், கணிசமான தொல்லைக்கு இடமிருக்கிறதா, இல்லையா என்பது ஆராய்ந்து அறியத் தக்கதாகும்.

இப்பொழுதுள்ள நான்கணா, எட்டணா நாணயங்களுக்குச் சமமான மதிப்புடைய முறையே 25, 50 'நயா பைசா' நாணயங்களைப் பெறுவதில் சிக்கல் எதுவும் இல்லை. ஆனால், அதற்குக் குறைவான இப்பொழுதுள்ள மற்ற நாணயங்களுக்கு நேர் சமமான மதிப்புடைய 'நயா பைசா' நாணயங்களைப் பெறுவதில் தவிர்க்க முடியாத பெருந் தொல்லை இருக்கிறது என்பதை எவரும் மறந்துவிடுவதற்கில்லை.

எடுத்துக்காட்டாக ஒன்றைக் குறிப்பிடுகிறோம். 9 அணாவிற்கு 56 'நயா பைசா' கிடைக்கும்; 0-9-3-க்கு, 58 'நயா பைசா' கிடைக்கும். ஆனால் 0-9-6க்கோ 59 'நயா பைசா'தான் கிடைக்கும்; அதுபோன்றே 0-9-9க்கு 61 'நயா பைசா' கிடைக்கும் பொழுது 10-அணாவிற்கு 62 'நயா பைசா'தான் கிடைக்கக் கூடும்.

அரசாங்க அறிக்கையில் 1-அணாவிற்கு 6 'நயா பைசா' எனக் கணக்கிட்டிருப்பதைக் கொண்டு, 11-அணாவிற்கு 66 'நயா பைசா'தானே கிடைக்க வேண்டும் என்று முடிவுகட்டி விடக் கூடாது. அரசாங்க மதிப்புப்படி 11-அணாவிற்கு 69 'நயா பைசா' கிடைக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட எடுத்துக் காட்டுகளைக்கொண்டு, 'நயா பைசா' நாணய ஏற்பாட்டில், மக்களுக்கு வரவிருக்கும் சிக்கல் எத்தகையதாக இருக்கும் என்பதை ஒருவாறு யூகித்துக் கொள்ளலாம்.

நன்கு எழுதப் படிக்கத் தெரிந்தவர்களுக்கே, அரசாங்க நாணயமாற்று அட்டவணையை வைத்துக் கொண்டும், இன்றுள்ள சிறுசிறு நாணயங்களுக்குச் சரியான மதிப்புடைய 'நயா பைசா'க்களை நிர்ணயிப்பது, மிகவும் சிக்கலாக இருக்கும். படித்தவர்கள் பாடே இதுவானால், எழுத்தறிவே இல்லாதவர்கள் கதி மேலும் தொல்லையானதாகத்தான் இருக்குமென்பதை சொல்லாமலே தெரிந்து கொள்ளலாம்.

பொருட்களின் விலையை 'நயா பைசா' நாணயத்தில் வரையறுப்பதில் வியாபாரிகளுக்கும் சிக்கல் இருக்கிறது. அதேபோன்று, பொருட்களைப் பெற்றுக்கொண்டு, எஞ்சிய சில்லரையைப் பெறுவதிலும் பண்டங்களை வாங்குவோருக்குப் பெரும் சங்கடம் இருக்கிறது. பண நஷ்டத்திற்கும் இடமிருக்கிறது.

ஒன்றிரண்டு 'நயா பைசா'க்கள் மிகமிகச் சாதாரணமானதாக ஆட்சியாளர்களுக்குப் படலாம். ஆனால், ஒரு 'நயா பைசா' இருந்தால் உப்பு வாங்கலாம்; இரண்டு மிளகாய் வாங்கலாம், அழுகின்ற குழந்தையின் வாயை மூடவைக்க ஒரு முறுக்கு வாங்கலாம் என ஏங்கி வாழும் மக்களை, ஒரு 'நயா பைசா'வை இழக்கச் செய்வதும் மன்னிக்கமுடியாத பெருங்குற்றமாகும்.

எழுத்தறிவற்றவர் தொகை பெரிய எண்ணிக்கையில் இருந்துவரும்பொழுது, இந்த நாணய மதிப்பீடும ஏற்பாட்டின் விளைவாக, தொல்லைகள் பெருகுவதற்கே இடமுண்டு. வாய் செத்தப் பூச்சிகளான ஏழை மக்களை அச்சுறுத்தி வஞ்சிப்பதும், இந்த மூன்று ஆண்டுக் காலத்திலும் சர்வ சாதாரணமாகப் பரவலாக இருந்து வரும்.

25, 50, 100 தொகை மூன்று 'நயா பைசா' நாணயங்களும், பருமன் நீளமாக, மற்ற உருவ அமைப்பில் ஒன்று போலவே இருந்து வருகின்றனவாம். எழுத்தறிவு இருந்தால் அன்றி இந்த நாணயங்களின் மதிப்பைத் தனித்தனியாகத் தெரிந்துகொள்வது சுலபமல்ல. தடிப்பில் காணப்படும் வேறுபாட்டைக்கொண்டு, நாணயத்தின் தொகை மதிப்பைக் கண்டறிவதென்பது அனைவருக்கும் இயலாது. எனவே, இப்பொழுது வழக்கத்தில் உள்ள நாணயங்களின் அமைப்பே போன்று, இருட்டிலும், நாணயங்களைத் தடவிப் பார்த்துத் தெரிந்துகொள்ளும் வகையில், 'நயா பைசா'நாணயங்கள் உருவாக்கப்படல் வேண்டும். அப்பொழுதுதான் 50 'நயா பைசா' கொடுக்க வேண்டியதற்கு 25 'நயா பைசா' நாணயத்தைக் கொடுத்து ஏமாற்றும் முயற்சிக்கு பலியாகாமல் நமது மக்களைக் காப்பாற்ற முடியும்.

'நயா பைசா' நாணயங்களால், தொகையைக் குறிப்பிடும் எண்ணைத் தவிர மற்ற குறிப்புகள் இந்தி மொழியிலேயே பொறிக்கப்பட்டு இருக்கின்றன. இந்தி மொழி பேசாத மக்களிடம் இந்தி பலவந்தமாகத் திணிக்கப்பட மாட்டாது என்ற இந்தியப் பேரரசின் வாக்குறுதிக்கு, இந்த நடைமுறை, சிறந்த தோர் சான்று ஆகும்!

'நயா பைசா'வில் இந்தி மொழி மட்டுமே இடம் பெற்றிருப்பது எதைக் காட்டுகிறது? இந்தி உள்ளிட்ட பதினான்கு மொழிகளை தேசீய மொழிகள் என இந்திய அரசியல் சட்டம் ஒப்புக்கொண்டு இருக்கிறது. ஆனால் நடைமுறையிலோ, இந்தி மொழியுடன் சமநிலை பெறும் உரிமை மற்ற பதின்மூன்று மொழிகளுக்கு அறவே கிடையாது. சட்டத்தின் மூலம் சமத்துவம் வழங்கப்பட்டிருந்த போதிலும் நடைமுறையில் ஓரவஞ்சனை தான் மற்ற மொழிகளுக்குக் காட்டப்பட்டு வரும் என்ற உண்மையை வலியுறுத்த, இந்த 'நயா பைசா' நாணயங்கள் சிறந்த சான்றுகளாகும். இது, என்ன நாணயமோ நாம் அறியோம்.

இந்தியப் பேரரசு மேற்கொண்டுவரும் குழப்பமான நடவடிக்கைகள் பலவற்றிலும், 'நயா பைசா' நாணயத் திணிப்பும் ஒன்றாகும். அனைத்திலும், சிகரம் போன்றதுமாகும்.

வடக்கில் அமையும் இரயில் பாதைகள்

20,000 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர்

மத்திய இரயில்வேயில், 187-மைல் நீளத்துக்கு காண்ட்வா—ஹிங்கோலி மீட்டர் கேஜ் இரயில் பாதையை அமைப்பதற்கு இதுவரையில் மொத்தம் ரூ. 1,24,00,000-க்கு காண்டிராக்டுகள் விடப்பட்டிருக்கின்றன. விரைவில், மேற்கொண்டும் சுமார் ரூ. 70,00,000 செலவாகக் கூடிய வேலைகளுக்கு காண்டிராக்டுகள் கொடுக்கப்படலாம்.

இந்த இரயில் பாதை, தென்னிந்திய மீட்டர் கேஜ் பாதையை வட இந்திய மீட்டர் கேஜ் பாதையுடன் இணைக்கின்ற முதலாவது பாதையாகும். நாடு சுதந்திரம் பெற்றதிலிருந்து மேற்கொள்ளப்பட்டுள்ள மிகப் பெரிய கட்டுமான வேலை இதுதான். அங்கே சுமார் 15,000-தொழிலாளர்கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனர்; சுமார் 5,000 நான்காவது வகுப்பு இரயில்வே சிப்பந்திகள், பல்வேறு வேலைப் பிரிவுகளிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

திட்ட அதிகாரிகள் இதுவரையில் 53 மைல் நீளத்துக்குப் பாதையைப் பூர்த்தி செய்துள்ளனர்; மேற்கொண்டு 70 மைல் தூரத்துக்கு வேலை நடைபெற்று வருகிறது. சுமார் 100 மைல் தூரம் வரையில் இரயில் பால அமைப்பு வேலைகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

'வெறி' ஒன்றுதான்; ஆனால் 'இடம்' மட்டும் வேறு!

'இலங்கைப் பண்டாரம் கேட்டால் இங்குள்ளவர்கள் என்ன பதில் சொல்லுவார்கள்?'

"பெரும்பான்மையான மக்கள் பேசுகிறார்கள் என்பதற்காகவே ஒரு மொழியை தேசீய மொழியாக்கிவிடக் கூடாது.

"இலங்கையில் சிங்கள வெறி இருப்பதைப் போல்தான் இந்தியாவில் இந்தி வெறியும் இருக்கிறது சிங்கள வெறியர்கள் எதைப் பேசுகிறார்களோ அதையேதான் இங்கு இந்தி வெறியர்களும் செய்கையில் காண்பித்து வருகிறார்கள்."

—இவ்வாறு, 'நவ இந்தியா' இதழில், 'யு. ஆர்.' என்பவர், 'ஊர் வம்பு' என்ற பகுதியில் குறிப்பிட்டுள்ளார்.

"இந்தியை தேசீய மொழியாக்குவதற்குப் பதிலாக ஆங்கிலமே தொடர்ந்து இருந்து வரலாமென்று, 'தேசபக்தர்'களும், நல்ல மனது படைத்தவர்களும் சொன்ன சொல் அவர்கள் காதில் ஏறவில்லை; அல்லது, ரோமன் லிபியிலாவது இந்தி மொழியை வைத்துக்கொள்ளலாம் என்றால், அதற்கும் அவர்கள் சம்மதிக்கவில்லை.

"நீங்கள் மட்டும் இந்தியை தேசீய பாஷையாக வைத்துள்ளபோது, நாங்கள் மட்டும் சிங்களத்தை ஏன் தேசீய பாஷையாக்கக்கூடாது......?' என்று, இலங்கைப் பண்டாரம் கேட்டால், இங்குள்ளவர்கள் என்ன சொல்லப் போகிறார்கள்? 'வெறி ஒன்றுதான்; ஆனால், இடம் மட்டும வேறு......' என்று சொல்வதைத் தவிர, வேறு வழியும இல்லை."

35,000 மைல் நீளம் மின்சாரக் கம்பங்கள்!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், சுமார் 10,000 கிராமங்களுக்கு மின்சார வசதி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், ஏறக்குறைய 35,000 மைல் நீளத்துக்கு மின்சாரக் கம்பங்கள் அமைப்பதற்கு சுமார் 8,50,000 கம்பங்கள் தேவையாக இருக்கும். இந்தக் கம்பங்களை அமைப்பதற்கு, உருக்குக்குப் பதிலாக, மரத்தை உபயோகிப்பதன் மூலம் மூலதனச் செலவில் 1·5 கோடி ரூபாயும், 45,000 டன் உருக்கும், மிச்சப்படும் என்று தெரியவருகிறது.

தொழில்புரியும் பெண்களுக்கு விடுதிகள்

பம்பாய், ஜூன் 16—

மாதச் சம்பளம் ரூ 50 முதல் ரூ. 200 வரை பெற்று தொழில் புரியும் பெண்களுக்கான விடுதிகளை பம்பாயில் நிறுவ மத்திய சமூகநல போர்டு தீர்மானித்துள்ளதென்று தெரிகிறது. மாதர் சங்கங்கள் இதை நடத்துமாம்.

க்ஷயரோகத்தையொழிக்க மாபெருந் திட்டம்

ஜினிவா, ஜூன் 18—

1948-க்கும் 1956-க்கும் இடையில், 'க்ஷயரோகம் இருக்கிறதா? என்று 16,40,00,000 பேர் பரிசோதனை செய்யப்பட்டார்கள்; 6,40,00,000 பேர் நோயை தடுக்க பி.ஸி.ஜி. ஊசி குத்தப்பட்டார்கள்,"

என்று, உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. இந்தத் திட்டம் முன் எக்காலத்திலும் நடத்தப்படாத மிகப் பெரிய திட்டம் ஸ்காண்டிநேவிய உதவி நிறுவனங்களால் இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின் இது ஆரம்பிக்கப்பட்டது; அதன்பின் உலக சுகாதார நிறுவனம், ஐ. நா. குழந்தைகள் அவசர நிதி ஆகியவற்றின் உதவியால் மற்றக் கண்டங்களிலும் நடத்தப்பட்டது; அந்தத் திட்டத்தின் பெரும் பகுதி ஆசியாவில் நடத்தப்பட்டது.

அகதி மாணவர் கல்விக்கு ரூ. 6 கோடி செலவு!

சிம்லா, ஜூன் 15—

மேற்கு பாகிஸ்தானிலிருந்து வந்த அகதி மாணவர்களின் கல்விக்காக இதுவரையில் ரூ. 6 கோடி செலவு செய்திருப்பதாக இந்திய அரசாங்கத்தின் துணை மந்திரி கே. பான்ஸ்லே அறிவித்துள்ளார்.

இந்தியப் பேரரசு வற்புறுத்துகிறது!

சென்னை, ஜூன் 16—

குறைந்த வருமானம் பெறுவோருக்கு மலிவான வீடு கட்டித் தருவது அவசியம் என்றும், எனவே, இந்த இன்றியமையாத பிரச்சினையில் மாநில சர்க்கார்கள் தனி கவனம் செலுத்தவேண்டும் என்றும் இந்தியப் பேரரசு வற்புறுத்தியுள்ளதாம்.

சத்துமிகுந்த பிஸ்கட்டுகள் தயாரிப்பு

மைசூர், ஜூன் 16—

மைசூரிலுள்ள மத்திய உணவு தொழில் நுணுக்க ஆராய்ச்சிக் கழகம், இந்திய பலநோக்கு உணவுத் தயாரிப்புத் திட்டத்தின்கீழ் பல நோக்கு 'பிஸ்கட்டு'கள் உற்பத்தி செய்யுமாம்.

இம்மாதிரியான 'பிஸ்கட்'டில் மற்ற 'பிஸ்கட்'டுகளைவிட கொழுப்புச் சத்து அதிகமிருக்குமாம். 'வைட்டமின்' சத்துகளும் மற்றும் போஷாக்குச் சத்துகளும் அதிகமிருக்குமாம். இப்பொழுது இங்கு இலட்ச ரூபாய் பெறுமான 'பிஸ்கட்'டுகள் உற்பத்திக்குப் பிரதமர் நேரு ஒப்புதல் அளித்திருக்கிறார் எனத் தெரிகிறது.

'போராட வேண்டிய காலம் வந்துவிட்டது'

இலட்சியத்தை அடைய முன்னாள் முதலமைச்சர் முழக்கம்

சிங்கப்பூர், ஜூன் 17—

சிங்கப்பூரிலுள்ள 67 தொழிற் சங்கங்களின் சம்மேளனத்தில் எல்லா அரசியல் கட்சிகளையும் இணைத்து, சுதந்திரத்துக்காகப் போராட புதுகூட்டு அரசினர் மேற்கொண்டுள்ள முயற்சிக்கு முழு ஆதரவு தெரிவிக்கப்பட்டது.

தொழிலாளர்கள் ஒன்றுபட்டு சுதந்திரத்திற்காகப் போராட வேண்டிய காலம் வந்துவிட்டதென்றும், அவர்கள் ஒன்றுபட்டு இலட்சியத்தை அடைய வேண்டுமென்றும் முன்னாள் முதலமைச்சர் டேவிட் மார்ஷல் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

பார்வையிழந்தோருக்கு உபகாரச் சம்பளங்கள்

புதுடில்லி, ஜூன் 18—

கண் பார்வையற்றவர்கள், உயர்தரக் கல்வி அல்லது வேலைப் பயிற்சி அல்லது தொழில் பயிற்சி பெறுவதற்காக, 1956—57-ல் ஒவ்வொருவருக்கும், மாதம் ஒன்றுக்கு ரூ. 75 அல்லது ரூ. 100 மதிப்புள்ள 'பள்ளி பிற்காலப் படிப்பு உபகாரச் சம்பளங்களை' வழங்குவதென்று இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ளனர்.

‘விருப்பப்படி பதவிகளைத் துறக்க அமைச்சர்களுக்கு உரிமை’

‘ஜனநாயக முறைகளினால்தான் பம்பாய் நகரைப் பெற வேண்டும்’

காங்கிரசிற்கு வெற்றி தேடவும் புதிய முயற்சி!

மகாராட்டிர மாகாண காங்கிரஸ் குழுவின் முடிவு

பூனா, ஜூன் 17—

“பம்பாய் நகரத்துடன் கூடிய சம்யுக்த மகாராஷ்டிரத்தை அமைப்பது என்னும் குறிக்கோளை ஜனநாயக அடிப்படையில் அடைவதுதான் ஒரே வழி” என்றும், “மகாராஷ்டிரப் பிரதேசக் காங்கிரஸ் கமிட்டியின் கொள்கையை நிறைவேற்றப் பொதுமக்களின் விருப்பத்தைப் பெறுவதற்கான பணியில் ஈடுபடுவதற்கு, அரசாங்கத்தில் அலுவல் பார்த்துவரும் பொறுப்பு வாய்ந்த காங்கிரஸ்காரர்கள் தாங்கள் விரும்பினால் தங்கள் பதவிகளைவிட்டு வெளியேறலாம்” என்றும், இன்று மகாராஷ்டரப் பிரதேசக் காங்கிரஸ் கமிட்டி ஒரு தீர்மானத்தின் வாயிலாக உணர்த்தியது.

இத்தீர்மானம் பம்பாய் நிதி மந்திரி திரு. பி. எஸ். ஹிரே அவர்களால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. இதை ஆதரித்து 60 உறுப்பினர்களும், எதிர்த்து 56 உறுப்பினர்களும் வாக்களித்தனர்.

மகாராஷ்டிரப் பிரதேசக் காங்கிரஸ் கமிட்டியில் உள்ள இரண்டு கோஷ்டிகளுக்குமிடையே கருத்து ஒற்றுமை உண்டாக்குவதற்காக இரண்டு நாட்கள் நிர்வாகக்குழு முயன்றும் கருத்து வேற்றுமைகளைப் போக்கமுடியவில்லை; அதன் பிறகுதான், மேற்கண்டவாறு தீர்மானித்துள்ளார்.

ஹிரேயின் தீர்மானத்தில், காங்கிரஸ் மேலிடம் சம்புக்த மகாராஷ்டிர அமைப்பு விஷயத்தில் செய்துள்ளமுடிவுக்கு அதிருப்தியையும், வெறுப்பையும் காட்டுவதாகக் கூறுகிறது. பம்பாய் நகரத்தையும் பெல்காம், கார்வார் முதலியவற்றில் உள்ள மராத்தி மொழி பேசும் மக்கள் வாழும் பகுதிகளையும், மற்றும் எல்லைப் பகுதிகளில் மராத்தி பேசும் மக்கள் வாழும் பகுதிகளையும் நீக்கிவிட்டுச் சம்யுக்த மகாராஷ்டிரம் அமைக்க முடிவு செய்திருப்பது மகாராஷ்டிரருக்குச் செய்த அநீதியாகும் என்றும் அத்தீர்மானம் கூறுகிறது.

5 ஆண்டுகட்குப் பிறகு பம்பாய் நகரப் பிரச்சினை, நகர மக்களின் விருப்பத்தை அறிந்து, மீண்டும் பரிசீலிக்கப்படும் என்று பிரதமர் நேரு கூறியதைப் பற்றிக் குறிப்பிட்டு, “பம்பாய் நகரம் மகாராஷ்டிரத்தோடு சேர்ந்த ஒரு நகரம் என்றும், எனவே, அதன் வருங்காலத்தை நகரே தீர்மானித்துக் கொள்ளவிடுவது சரியாகாது” என்றும் அத்தீர்மானம் கூறுகிறது.

ஆங்கில பணிப்பெண்

‘மகாராஜா’வின் மனைவியாகிறார்

லண்டன், ஜூன் 16—

மைமன் சிங்கை சேர்ந்த பணக்காரரான 25 வயதுடைய இந்திய மகாராஜ லண்டன் உணவு விடுதியொன்றில் வேலைக்காரியாக பணிபுரிந்துவந்த ஜேனேட் ஹிக்ஸ் என்னும் 20 வயதுடைய ஆங்கில அழகியை இங்கு பதிவு மணம் செய்துகொள்கிறார் என்று தெரியவருகிறது.

இத்திருமணத்தை ஜேனட்டின் தந்தை எதிர்த்ததாயும், ஆனால் மகாராஜாவே நேரில்வந்து அவரை இணங்கச் செய்ததாயும் கூறப்படுகிறது.

திருமணத்தின்போது மணமகன் ஒரு துண்டு பஞ்சை மோதிரமாக விரலில் அணிந்துகொள்வாராம்; அப்பெண்மணிக்கு கல்கத்தாவில் மகாராஜா கொடுத்த 5,000 பவுன் பெறுமான வைரமோதிரம் பிரிட்டிஷ் சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டதென்றும், ஆனால் திருமணமாகியதும் அதைத் திரும்பப்பெற மணமகன் வர்மானித்திருக்கிறாரென்றும் கூறப்படுகிறது. பாரிஸ், ரோம் ஆகிய இடங்களில் புதுமணத் தம்பதிகள் தேன் நிலவைக்கழித்துவிட்டு இந்தியாவுக்குத் திரும்புவார்களாம்.

இன்றையத் தேர்தல் நிலை பற்றி நேரு

நாக்பூர், ஜூன் 16—

“இப்பொழுது அமுலில் இருந்துவரும் நேர்முகமான தேர்தல் முறையால் அதிகச் செலவு ஏற்படுகிறது; இதனால் அரசியல் வாழ்வில் விரும்பத் தகாத சூழ்நிலைகள் பல ஏற்படுகின்றன; குறைந்த செலவிலும், குழப்பங்கள் கஷ்டங்கள் இல்லாமலும் தேர்தல்கள் நடைபெறுவதற்கு நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும்” என்று, இங்கு நடைபெற்ற காங்கிரசு ஊழியர்கள் மாநாட்டில் பேசிய போது பிரதமர் நேரு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:

“அடிப்படையிலுள்ள நிறுவனங்களுக்கு இப்பொழுதுள்ள நேர்முகமான தேர்தலுக்குப் பதில், மறைமுகமான தேர்தல்களை நடத்தலாம். அதற்கு மேலுள்ள நிறுவனங்களுக்கு நேர்முகமான தேர்தல்களை நடத்தலாம்.”

தென்னாட்டு மாலைகள்

பிரிட்டிஷ் அரசகுடும்பத்தினருக்கு அணிவிக்கப்பட்டன

ஸ்டாக்ஹோம், ஜூன் 16—

இங்குள்ள இந்திய அமைச்சர் இந்தர்சென் சோப்ரா இல்லத்தில் நடைபெற்ற ஒரு விருந்தளிப்பின் போது இராணி எலிசபெத்துக்கும், இளவரசி மார்க்கரெட்டுக்கும், கிளவ்ஸ்டர் சீமாட்டிக்கும் தென்னாட்டு சரிகை மாலைகள் அணிவிக்கப்பட்டன எனத்தெரிகிறது.

இராணியின் மணாளர் எடின்பர்க் கோமகனுக்கும், மற்றும் கிளவ்ஸ்டர் கோமகனுக்கும் சந்தனக் கட்டையிலிருந்து தயாரித்த மாலைகள் போடப்பட்டன என்றும் தெரியவருகிறது.

செயங்கொண்டம் அருகில் பயங்கர கார் விபத்து

அரியலூரிலிருந்து செயங்கொண்டம் வந்துகொண்டிருந்த செல்வம்மோட்டார் 13-6-56புதன்கிழமை காலை மணவதி கிராமத்திற்கு அருகில், நாவற்பழ மரத்தில் மோதி பெரும் சேதமடைந்தது. புதுமணத் தம்பதிகளுக்கு துணை வந்த விசயலட்சுமி விபத்து இடத்திலேயே மரணமடைந்தார். கார் டிரைவர் இஸ்மாயில் அரியலூருக்குக் கொண்டு செல்லும் பொழுது மரணமுற்றார்; மற்றொரு வியாபாரி திருச்சிக்குக் கொண்டு போகையில் மாண்டார். காரில் ஏறிவந்த சுமார் 42 பேருக்கும் கண், காது, மூக்கு, மண்டை இவைகளில் தாக்கப்பட்டு மூர்ச்சையாயினர். கண்டக்டர், கார் மோதிய வேகத்தில் படியருகில் இருந்ததால் தூக்கி வெளியே எறியப்பட்டார். காயம் பட்டவர்களில் பலர் ஜெயங்கொண்டம், அரியலூர், திருச்சி ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெறுகின்றனர். (ஈ. கி)

ரூ. 22 கோடி செலவில்!

பூமிக்குக் கீழ் இரயில் வண்டி விடப்படுமாம்

எட்டாண்டுத் திட்டமொன்றை பம்பாய் மேற்கொள்ளுகிறது

பம்பாய், ஜூன் 15—

பம்பாயில் சாலைகளில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க, தெற்கில் கொலாபாவிலிருந்து வடக்கே தாதர்வரை சுற்று வட்டமாக 18 மைல்களுக்கு பூமிக்குக் கீழ் ஒரு ‘மீட்டர் கேஜ்’ இரயில் வண்டியை விட பி. ஐ. எஸ் டி. நிறுவனம் தீர்மானித்திருக்கிறதாம். அதற்கு ரூ 22 கோடி செலவாகுமென்றும், அதை நிறுவ சுமார் 8 ஆண்டு காலம் ஆகுமென்றும் தெரிவிக்கப்படுகிறது. வெளிநாட்டு எஞ்சினியர்களிடமிருந்து ஏற்கனவே ‘டெண்டர்’களை அந்த நிறுவனம் கோரியுள்ளதாம்.

சட்லெஜ் நதியின் மேற்கு கரையில்!

உர—கன திரவத் தொழிற்சாலை

புதுடில்லி, ஜூன் 18—

நங்கல் இரசாயன உர—கன திரவத் (ஹெவி வாட்டர்) தொழிற்சாலையை நங்கல் நகரத்துக்கு எதிர்புறத்தில் சட்லெஜ் நதியின் மேற்குக் கரையில் அமைப்பதென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கான நிலத்தை ‘ஆர்ஜிதம்’ செய்வதற்கான வேலை நடைபெற்று வருகிறது

நங்கல் தொழிற்சாலையில் ஆண்டு ஒன்றுக்கு 70,000 டன் நைட்ரஜனும், 14 டன் கன திரவமும் (ஹெவி வாட்டர்) உற்பத்தியாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள மூன்று இரசாயன உரத் தொழிற்சாலைகளில் இதுவும் ஒன்றாகும். மற்ற இரண்டு தொழிற்சாலைகளில் ஒன்று ஒரிசாவைச் சேர்ந்த ரூர்க்கேலாவிலும், மற்றொன்று நெய்வேலியிலும் நிறுவப்படும்.

35 ‘ஜாடி’களில் தங்கம், வெள்ளி மொகராக்கள்!

பழுதுபார்த்த கட்டிடத்தில் கண்டுபிடிக்கப்பட்டது

சப்ரா, ஜூன் 15—

தொழிலாளர்கள் சிலர் ஒரு கட்டிடத்தை பழுது பார்த்துக்கொண்டிருந்தபோது தங்கம், வெள்ளி, மொகராக்கள் நிறைந்திருந்த 35 - ஜாடிகள் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

அதிகாரிகள் இவற்றைப் பாதுகாக்க ஏற்பாடுகள் செய்துள்ளார்களென்றும், அந்த இடத்தை மேலும் தோண்டுகிறார்களென்றும் கூறப்படுகிறது கிடைத்துள்ளப் பொருள்கள் சில இலட்சம் பெறுமானவை என்று மதிப்பிடப்படுகிறது.

பொன்னும்—மணியும் புதைந்து கிடக்கிறதாம்!

ஆல்மேரியா தீவில் ஜப்பான் கப்பல்கள் நடமாடும் மர்மம்

ஜாகர்தா, ஜூன் 16—

போர்க்காலத்தில் இந்தோனேசியாவிலிருந்து ஜப்பானியர்கள் தோற்கடிக்கப்பட்டுத் துரத்தப்பட்டபோது, தங்களிடமிருந்த பொன்னும்—மணியும். மின்னும் அணிகளையும், பிற விலையுயர்ந்த பொருட்களையும் ஆல்மேரியா தீவில் எங்கேயோ புதைத்துவிட்டதாகக் கூறப்பட்டுவருகிறது; இப்போது பல ஜப்பானியக் கப்பல்கள் அந்தத் தீவில் வந்துபோவதால், புதைத்துவைத்த பொருட்களைத்தான் அவைகள் தேடிக்கொண்டிருக்கின்றனவா என்பது பற்றி அதிகாரிகள் கண்காணித்து வருகின்றனராம்!

உணவு உற்பத்தியில் கருத்து வேற்றுமை?

விவசாய அமைச்சர்கள் மாநாடு இதற்காகவே கூடுகிறது?

புதுடில்லி, ஜூன் 16—

விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்காக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 170 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதை எந்த அளவுக்கு அதிகரிக்க முடியும் —உணவு உற்பத்தியின் குறிக்கோள் அளவை எந்த அளவுக்கு அதிகப்படுத்த முடியும் என்பது பற்றி ஆராய, மாநிலங்களின் விவசாய அமைச்சர்கள் மாநாடு ஒன்று முசௌரி என்ற இடத்தில் நடைபெறும். இம்மாநாடு ஜூன் 28-ம் நாள்முதல் 30-ம் நாள்வரை நடைபெறும். இந்திய அரசாங்க விவசாய அமைச்சர் துறையால் இந்த மாநாடு கூட்டப்படுகிறது.

கடந்த தேசிய வளர்ச்சிக் குழுவின் கூட்டத்தில், திட்டக்குழுவின் துணைத் தலைவரான வி. டி. கிருஷ்ணமாச்சாரி, குழுவின் உறுப்பினர்களுக்கு ஒரு சுற்றறிக்கை அனுப்பியுள்ளார். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் அதிகப்படியாக முதலீடு செய்யாமலேயே, உணவு உற்பத்தியை மேலும் 40 சத விகிதம் அதிகரிக்க முடியும் என்று கூறியுள்ளார்.

இந்திய அரசாங்க நிதி அமைச்சர் சி. டி தேஷ்முக், மக்கள் சபையின் கடந்த கூட்டத்திலே இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றி நடைபெற்ற விவாதத்தில் குறுக்கிட்டு இதே கருத்தை கூறினார்; ஆனால், இந்தக் கருத்தை இந்திய அரசாங்க உணவு, விவசாய அமைச்சர் துறை ஏற்கவில்லை. அதிகப்படி முதலீடு இல்லாமல் 40 சத விகிதம் அதிகரிக்க முடியாது என்று கருதுகிறது. ஆகையால் இதில் மாநிலங்களின் விவசாய அமைச்சர்களின் கருத்தைக் கேட்பதற்காகவே இந்த மாநாடு கூட்டப்படுகிறது.

ஊர்வலத்தைக் கலைக்க தடியடிப் பிரயோகம்!

ஹோஷியார்பூர், ஜூன் 17—

பலாத்காரம் செய்யத் தொடங்கிய மகா பஞ்சாப் ஆதரவாளர்கள் ஊர்வலத்தைக் கலைக்க போலீசார் தடியடிப்பிரயோகம் செய்தனராம்.

ஊர்வலக்காரர்கள் கற்களை வீசியதில் 9 போலீசார்கள் காயமடைந்தனரென்றும், 45 பேரை போலீசார் கைது செய்து காவலில் வைத்தனரென்றும், இவர்களில் 35 பேர் காயமடைந்தனரென்றும் கூறப்படுகிறது.

300 பேருக்கு மேல் காயமடைந்ததாக மகாபஞ்சாப் சமிதி வட்டாரங்கள் கருத்தறிவிக்கின்றன.

வீதி நடனங்கள் தடுக்கப்படுகிறது!

ஆந்திர அரசினர் சட்டமியற்றுவர்

கர்னூல், ஜூன் 17—

ஆந்திராவில் திருமணம் முதலிய ஊர்வலங்களில் பொது வீதிகளில் கணிகையர் மகளிர் நடனமாடுவதைத் தடுக்கச் சட்டமியற்ற ஆந்திர அரசினர் முடிவு செய்துள்ளனராம்.

ஆந்திராவில் நாட்டியமாடுதல் மிகவும் இலாபமுள்ள தொழில் என்றும், இப்பொழுது பொது வீதிகளில் நடனமாதர்கள் தங்களின் கலையைக் காட்டுவது அங்கு சாதாரணமாகிவிட்டதென்றும் கூறப்படுகிறது.

11-புதிய கதர் உற்பத்தி நிலையங்களாம்!

சென்னை, ஜூன் 15—

சென்னை மாநிலத்தில் கோயம்புத்தூர் திருநெல்வேலி, வடமலபார் ஆகிய இடங்களில் 11 புதிய கதர் உற்பத்தி நிலையங்களைத் திறப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளதாம்.

கோவை மாவட்ட தி. மு. க. குழு கூட்டம்

“24—6—56 ஞாயிறு காலை 10-மணியளவில், திருப்பூரில் வாலிபாளையம் ராலே கிட்டிங் கம்பெனியில், கோவை மாவட்ட தி. மு. கழகக் குழுக்கூட்டம் நடைபெறும்; அதுபோது, (1) மாநில மாநாட்டுத் தீர்மானங்கள்; (2) மாவட்ட மாநாடு; (3) காலியான பொதுக்குழு உறுப்பினர் பதவிக்குத் தேர்தல் — ஆகியவைகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்,”

என்று, கோவை மாவட்ட தி. மு. க. செயலாளர் ஈ. வெ கி. சம்பத் அவர்கள் அறிவிக்கிறார்.

மாணவர் மாநாடு

★

“16—5—56-ல் திருச்சியில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக மாணவர் கிளையின் அமைப்புக் கூட்டத்தில், இரண்டாவது மாநிலமாநாட்டைக் கோவையில் ஜூலை இறுதியில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டிருந்ததை அறிவித்திருந்தோம்.

‘ஆனால் அண்ணா அவர்களும், பொதுச் செயலாளரும் மாநாட்டுத் தேதியை மாற்றியமைக்க ஆலோசனைக் கூறியிருப்பதால் ஜூலையில் நடைபெற இருந்த மாநாடு, காலம் குறிப்பிடாமல் தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்”

என்று, மாணவர் மாநில மாநாட்டு வரவேற்புக்குழுத் தலைவர் கோவை செழியன் அறிவிக்கிறார்.

மாநாட்டு நிதி

கோவை மாவட்ட கொடுமுடி தி. மு. கழகத்திலிருந்து மாநில மாநாட்டு நிதிக்காக 8-5-56-ல் தோழர் ச. ஏகாம்பரம் அவர்கள் மூலமாக அனுப்பிவைக்கப்பட்ட ரூ. 25-ம் கிடைக்கப் பெற்றோம்.

—தி. மு. க. தலைமை நிலையம்

மாநிலச் சீரமைப்புத் திட்டத்தில் யானைகள் நிலை

கோயம்புத்தூர், ஜூன் 16—

சென்னை மாநிலத்தில் மாநிலச் சீரமைப்புத் திட்டத்தை அமுல் செய்வதில் யானைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

மலபாரில் நீலாம்பூரிலும், வயநாட்டிலுமுள்ள தங்களின் நிரந்தர வாழ்விடத்திலிருந்து மூன்று ஆண் யானைகளும், ஐந்து பெண் யானைகளும் கோயம்புத்தூரிலுள்ள ‘டாப்-ஸ்லிப்’ பகுதிக்கு அழைத்துச் செல்லப்படுவதாக தெரிகிறது சுமார் 250 மைல் தொலைவு வரை நடந்து, இத்திங்கள் இறுதியில் அந்த யானைக் குடும்பங்கள் தங்களின் புது மாநிலத்தில் வாழத் தொடங்கும்.

உலக நாடுகள் தலையிடக் கூடாதாம்!

வெர்டுன் (பிரான்ஸ்), ஜூன் 17—

பிரெஞ்சு குடியரசுத் தலைவர் ரேனிகோட்டே விழாவொன்றில் பேசுகையில், அல்ஜீரியாவைப் பாதுகாப்பதற்கு முன்வரும்படி பிரெஞ்சு நாட்டவரை அழைத்துவிட்டு, இதில் தலையிடாதிருக்கும்படி உலகத்தை எச்சரிப்பதாகவும் அவர் கூறினாராம்.

இது உண்மைதானா?

19 திங்களாக அல்ஜீரியாவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் கிளர்ச்சியை ஒடுக்குவதற்கு பிரான்ஸ் உறுதியாகப் போராடியதால் அங்கு நிலைமை கட்டுக்கடங்கியுள்ளதென்று பிரதம அமைச்சர் கெய்மோலே தெரிவித்தாராம்.

எதேச்சாதிகாரத்தை எதிர்க்க திட்டம்

மொழி திணிப்புக்கு எதிராக 'உரிமை'ப் போராட்டம்?

யாழ்ப்பாணத் தமிழர்கள் ஒருமித்த முடிவு

கொழும்பு, ஜூன் 18—

வடக்கு இலங்கையில் உள்ள யாழ்ப்பாணத்தில் நேற்றிரவு நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில், 'அரசாங்க மொழி குறித்து அரசாங்கம் முடிவு செய்திருப்பதை நடைமுறைக்குக் கொண்டுவருவதை ஒற்றுமையுடன் எதிர்ப்பது' என்று தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தின் மேயரான திரு. எஸ். எஸ். நவரத்தனம் அவர்களால் கூட்டப்பட்ட இந்தப் பொதுக் கூட்டத்தில், தமிழ்ப் பேசும் மக்கள் வாழ்கின்ற பிரதேசங்களின் பிரதிநிதிகளாகப் பாராளுமன்றத்தில் உறுப்பினர் பதவி வைத்துவரும் எல்லாக் கட்சியைச் சார்ந்தவர்களும் பேசினர்.

தமிழர் காங்கிரஸைச் சேர்ந்த திரு. ஜி. ஜி. பொன்னம்பலம். 6 அம்சங்கள் அடங்கிய எதிர்ப்புத் திட்டத்தை வெளியிட்டார் :—

தமிழ்ப் பேசும் மக்கள் வாழ்கின்ற பிரதேசங்களின் பிரதிநிதிகளாகப் பாராளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருப்பவர்கள் பாராளுமன்ற நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளாமல் இருப்பது; தமிழர்கள் தம் பிள்ளைகளைச் சிங்களப் பள்ளிகளுக்கு அனுப்பாமலிருப்பது அல்லது அவர்களுக்குச் சிங்கள மொழி கற்பிக்க அனுமதியாமலிருப்பது; அரசாங்க அலுவலில் இருப்போர் சிங்கள மொழி கற்க மறுப்பது; ஸ்தல நிறுவனங்கள் தம் வேலைகளைத் தமிழிலேயே தொடர்ந்து நடத்துவது.

ஆகியவை திரு பொன்னம்பலம் கூறிய திட்டத்தில் முக்கிய பகுதிகளாகும்.

கலவரங்களில் மாத்திரம் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 21"

என்று, இலங்கையிலிருந்து வெளியான ஒரு பத்திரிகைச் செய்தி கூறுகிறது.

'சிங்களமொழி மாத்திரமே அரசாங்க மொழியாகத் திகழும்' என்ற மசோதா நிறைவேற்றப்பட்டதின் விளைவாகவே கலவரங்கள் நடைபெறுகின்றன என்பதை வாசகர்கள் உணர்வார்கள்.

இப்போது கலவரங்கள் ஓரளவில் நின்றுள்ளன என்றும், கலவரங்கள் நடைபெறுகையில் அப்பள்ளத்தாக்கை விட்டு வெளியேறியவர்கள் இப்போது மீண்டும் தம் சொந்த இடங்களுக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றனர் என்றும் தெரிய வருகிறது.

அப்பள்ளத்தாக்குப் பகுதிகளில் மாத்திரம் இதுவரையில் 150 பேர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இக்கலவரங்கள் குறித்து அரசாங்க அதிகாரிகள் யாதும் கூறாது மவுனம் சாதிக்கின்றனர்.

☆

மொழிக் கொள்கைக்கு குமாஸ்தாக்கள் எதிர்ப்பு

பழிவாங்கும் கொள்கைகள் கூடாதென குரலெழுப்புகின்றனர்

15,000 உறுப்பினர்களைக் கொண்ட இலங்கைப் பொதுக் கணக்காயர் ஊழியர் சங்கத்தின் நிர்வாகக் குழு இலங்கை அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை எதிர்ப்பது என்று தீர்மானித்துவிட்டது.

கீழ்க்கண்ட கருத்துக்களையும் நிர்வாகக் குழு வெளியிட்டது :—

இப்போதுள்ள அரசாங்க ஊழியர்கள், அலுவலில் சேர்ந்த காலத்தில், அரசாங்கப் பணியில் ஈடுபடுவோருக்கு இருக்கவேண்டிய தகுதிகளில், சிங்கள மொழியில் நிர்வாகத்தை நடத்தும் திறமையுள்ளவர்களாக இருக்கவேண்டும் என்பது ஒரு தகுதியாக இல்லை.

எனவே, இப்போது இலங்கை அரசாங்கம் நிறைவேற்றியுள்ள மொழி சம்பந்தமான மசோதா நடைமுறைக்கு வந்த பின், வருங்காலத்தில், அதிகாரிகளில் யாராவது ஒருவர் வேலையினின்று ஓய்வு பெற விரும்பினால் அப்படிச்செய்ய அவருக்கு உரிமை அளித்து, அவருக்கு நஷ்டஈடு கொடுக்கப்படல் வேண்டும். அரசாங்க அலுவலில் தொடர்ந்து வேலை பார்ப்பவர்களுக்கு, அவர்கள் சிங்கள மொழி அறியாத காரணத்தினால் அவர்களை [illegible] அல்லது [illegible] பழி வாங்கும் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படக்கூடாது.

☆

21-பேர் பலி!

"இலங்கையில் கிழக்கு மாகாணத்தில் உள்ள கால் ஓயாப் பள்ளத்தாக்குப் பகுதியில் கடந்த வாரத்தில் நடைபெற்ற

சென்னை என். ஜீ. ஓ. தூதுக் குழு பிரதமர் நேருவைக் காண முடியவில்லை

காரியதரிசியிடம் குறைகளை எடுத்துரைத்தனர்

புதுடில்லி, ஜூன் 18—

சென்னை அரசாங்கத்தில் பணியாற்றி வரும் கெஜட் பதிவாகாத அலுவலாளர்கள் சங்கத்தின் 36-பேர்கள் கொண்ட தூதுக்குழு, பிரதமர் நேருவை நேரில் கண்டு, கெஜட் பதிவாகாத அலுவலாளர்களின் குறைபாடுகளைக் கூறுவதற்கு, நேற்று மாலை புதுடில்லியை அடைந்தது.

பிரதமருடன் பேட்டி காண்பதற்கு முன்கூட்டியே ஏற்பாடு செய்துகொள்ளாததாலும், பிரதமர் இலண்டனுக்குப் புறப்படுவதற்கு ஆயத்தம் செய்து கொண்டும், வேறு பல முக்கிய அலுவல்களைப் பார்த்துக் கொண்டும் இருந்ததாலும் தூதுக் குழு பிரதமரை நேரிற் காண இயலவில்லையாம்!

தீவிர முயற்சியின் பயனாய்ப் பிரதமர் நேருவின் பிரதம காரியதரிசி திரு. பி. எம். கௌல் என்பவரைத் தூதுக் குழு சந்தித்து, சென்னை அரசாங்கக் கெஜட் பதிவாகாத அலுவலாளர்களின் குறைபாடுகளை அவரிடம் நன்கு விளக்கியது. என். ஜி. ஓ-க்களின் எல்லாக் கோரிக்கைகளையும் நிறைவேற்றுவதில் சென்னை அரசாங்கத்திற்கு ஏற்படும் தொல்லைகளை என். ஜி. ஓ-க்கள் உணர்வார் என்றும், ஆனால், இப்போது மத்திய அரசாங்க ஊழியர்கள் பெறும் அளவுக்குப் பஞ்சப் படியையாவது உயர்த்துவதற்கு ஆவன புரிதல் வேண்டுமென்றும், இல்லையேல் சென்னை மாநிலத்தில் உள்ள 60,000 என். ஜி. ஓ-க்களும் வேலை நிறுத்தம் செய்யவேண்டிவரும் என்றும் தூதுக்குழு பிரதம காரியதரிசியிடம் சொன்னதாகத் தெரிகிறது.

கள் அரசாங்கத்திற்குத் தெரியுமென்று அவர் குறிப்பிட்டாராம்.

கோவை நகரத் தோழர்களுக்கு :

★

"22-6-56 இரவு 9 மணிக்கு, கோவை நகர தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம் தெப்பக்குளம வீதியிலுள்ள நகர கழக அலுவலகத்தில் நடைபெறும்; அதுசமயம், செயற் குழுவில் காலியாக உள்ள இடங்களுக்குத் தேர்தல் நடைபெறும். தேர்தலில் நிற்க விரும்புகிற கழகத் தோழர்கள் 22-ந் தேதி மாலை 6 மணிக்குள் செயலாளருக்கு அறிவிக்கும்படி வேண்டப்படுகிறார்கள்.

குறிப்பு :—செயற் குழுவில் பிரதிநிதிகள் இல்லாத வார்டுகளில் உள்ள தோழர்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டுகிறேன்,"

என்று, செயலாளர் சே. அ. இராசமாணிக்கம் அறிவிக்கிறார்.

சந்திரன் — செவ்வாய்

கிரகங்களுக்குச் சென்று திரும்ப!

சந்திரன்—செவ்வாய் முதலிய கிரகங்களுக்குச் சென்று திரும்புவது, இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் நடைபெற்றுவிடுமாம்!

ராக்கெட் சோதனையிலும் ஆளில்லா விமானங்களைப் பறக்க விடுவதிலும், பரந்த வெளிப்பயண ஆராய்ச்சியிலும் சிறந்த முன்னேற்றமேற்பட்டிருக்கிறதென்றும், இந்தத் துறைகளில் தொடர்ந்து ஆராய்வதன் மூலம் கிரகங்களுக்குப் பிரயாணம செய்வது சாத்தியமாகிவிடுமென்றும் கூறப்பட்டுள்ளது.

☆

ஊழியர்களுக்கு சம்பள உயர்வு

காமராசரின் அறிவிப்பு

சென்னை, ஜூன் 18—

'சென்னை அரசாங்க காரியாலய அலுவலாளர்கள் தங்களுடைய சம்பளம், பஞ்சப்படி ஆகியவை பற்றி அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தைகள் நடத்துவதின் வாயிலாக உயர்த்திக்கொள்ள [illegible] செய்யலாம்,' என்று பிரதம மந்திரி காமராசர் (நாடார்) அறிவித்தார்.

அரசாங்கக் காரியாலய அலுவலாளர் சங்கத்தின் சார்பில் [illegible] 'சென்னை [illegible]' [illegible] அவர் அவ்வாறு குறிப்பிட்டார்.

காரியாலய ஊழியர் கனிக்[illegible] தொண்டினை அவர் பாராட்டிப் பேசிவிட்டு, அவர்களின் குறைபாடு

வாக்காளர்கள் விருப்பப்படி மத்திய நிதி அமைச்சர் தேஷ்முக் விலகுகிறார்

'உரிமை'யை விட்டுக் கொடுக்க இயலாத நிலைமையின் எதிரொலி

மற்றவர்களுக்கும் 'வழிகாட்டி'யாக அமைகிறார்

சுதந்திரத்திற்குப்பின் மூன்றாவது நிதி அமைச்சர் நிலை

புதுடில்லி, ஜூன் 18—

இந்திய அரசாங்க நிதிமந்திரி திரு சி. டி. தேஷ்முக் அவர்களின் விருப்பப்படி, அவரைப் பதவிலிருந்து விலக்கிவிட பிரதமர் நேரு ஒப்புக்கொண்டார் என்று தெரிகிறது.

பிரதமர் நேரு தம் வெளிநாட்டுச் சுற்றுப்பிரயாணத்தை முடித்துக்கொண்டு ஜூலை மாதம் இறுதியில் இந்தியா திரும்பியதும் தேஷ்முக் பதவியிலிருந்து விலகுவார்,

பம்பாய் நகரத்தின் வருங்காலம் 5 ஆண்டுகளுக்குப் பிறகு நகர மக்களின் விருப்பப்படி நிர்ணயிக்கப்படும் என்றும், அதுவரையில் மத்திய அரசாங்கத்தின் நேரடியான ஆட்சியில் இருக்குமென்றும் அறிவிக்கப்பட்டவுடனேயே நிதி அமைச்சர் தேஷ்முக், தமக்குப் பதவியிலிருந்து விடுதலை அளிக்குமாறு பிரதமர் நேருவைக் கேட்டதாகவும், பிரதமர் தமது வெளிநாட்டுச் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு இந்தியா திரும்பியதும், பதவியிலிருந்து தேஷ்முக் விலகுவதற்கு ஏற்பாடு செய்வதாக முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

மகாராஷ்டிரத்திலிருந்து பம்பாயைப் பிரிப்பதை, தனது தொகுதி மக்கள் எதிர்க்கின்றனரென்று குறிப்பிட்டு, தான் விலகுவதாகத் தேஷ்முக தெரிவித்திருந்தார்.

பம்பாயைப் பிரிப்பது பெரும் அநீதியென்றும், இது, மனச்சாட்சியை ஒட்டிய பிரச்சினை யென்றும், ஆகவே பதவியிலிருப்பது சங்கடமாக இருக்கிறதென்றும் அவர் கருதுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பதவிகளைத் துறக்க நினைக்கும் மற்ற மகாராஷ்டிர மந்திரிகளுக்கும், மக்கள்சபை உறுப்பினர்களுக்கும் தேஷ்முக் வழிகாட்டி விட்டார்; எனினும், அவர் விலகியது, மத்திய மந்திரி சபையிலுள்ள மற்ற மந்திரிகளுக்கு ஒரு இடையூறான நிலைமையை உண்டாக்கி விட்டதாகச் சொல்லப்படுகிறது.

இந்தியாவின் சுதந்திரத்திற்குப் பிறகு, நிதி அமைச்சர் பதவிலிருந்து விலகியவர்களில், தேஷ்முக் மூன்றாவது ஆவார் — முதலில், ஆர். கே. சண்முகம் (செட்டியார்) விலகினார்; பின்னர், ஜான் மத்தாய் விலகினார்; இப்போது, தேஷ்முக் விலகுகிறார்.

தேஷ்முக் பதவி காலத்தில்தான முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடிந்து, இரண்டாவது திட்டம் துவங்கிற்று.

காங்கிரஸ் சரிவு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"அதிகாரத்தின் விளைவாக காங்கிரஸ் போன்ற ஒரு புரட்சிகரமான கட்சிக்கு, பேராபத்து ஏற்படுவது ஆச்சரியமாகும்.

"மாநாட்டில் சில ஊழியர்கள் வலியுறுத்தியதே போன்று, காங்கிரஸ் கட்சிக்காரர்களுடன் அரசாங்க ஊழியர்கள இணைந்து செயல்பட வேண்டுமென, எவரும் எதிர்பார்க்கக் கூடாது; அவ்வாறு செயல் படும்படி நானும் கோர முடியாது.

"காங்கிரஸ் கட்சி பலத்தாழ்வுற்றுக் கிடப்பதற்கு அரசாங்க அதிகாரிகள் மீது பழி போடுகிறார்கள்; ஆனால், அதிகாரத்திற்கு வந்ததும், மிகைபடும கோரிக்கைகளைக் கொடுத்து அரசாங்க அதிகாரிகளைத் தொல்லைக்குள்ளாக்கி இருக்கிறார்கள் காங்கிரஸ் கட்சியினர்"

ஆதிக்கம் அகன்றது — ஆரவாரம் எழும்பியது!

போர்ட்ஸைத், ஜூன் 18—

75 ஆண்டு பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் முடிவைக் குறிக்க, சூயஸ் கால்வாய் மண்டலத்தில் கடற்படை மாளிகையில் எகிப்திய பிரதமர் கர்னல் நாசர் எகிப்தியக் கொடியை ஏற்றுவித்தார்.

'எகிப்து சுதந்திரமடைந்துவிட்டது' எனக் கூறியதும் மக்கள் மகிழ்ச்சிப் பெருக்கால் ஆரவாரித்தனர்; கப்பல்களின் சங்குகளெல்லாம் வெற்றிக் கீதம் பாடியது—என்றெல்லாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

நூற்பு ஆலையில் வேலை நிறுத்தம்

தொழிலாளர்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர்

புதுக்கோட்டை, ஜூன் 18—

வெள்ளனூரில் காவேரி நூற்பு நெசவு ஆலையில் உள்ளிருந்து வேலை நிறுத்தம் செய்துவந்த சுமார் 500 தொழிலாளர்கள், ஸ்தல அதிகாரிகள் உதவியின் பேரில் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர் எனத் தெரிகிறது. துவக்கத்தில் தொழிலாளர்கள் ஆலையைவிட்டு வெளியேவர மறுத்ததால், நிர்வாகத்தினர் கதவடைப்புச் செய்து விட்டதாக நேற்று அறிவிக்கப்பட்டது. இதற்குப் பிறகும் தொழிலாளர் வெளியே வரமறுக்கவே, அதிகாரிகளின் துணை நாடப்பட்டதாம்

சொற்பயிற்சிக் கூட்டம்

20-6-56 மாலை 6-30 மணிக்கு, சென்னை-இராயபுரம், ஆண்டியப்ப கிராமணி தெருவிலுள்ள திருவள்ளுவர் முன்னணி கழக அறையில், புலவர்-தி. தியாகராசன் தலைமையில் 'குறள் நெறி' எனும் பொருள் குறித்து தோழர்கள் யாகோப், சி. இளங்கோ, பாலன், சோமாகன், பா. கோ. வீரராகவன் ஆகியோர் பேசுவர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

ஏன் இந்த வேறுபாடு?

★

மத்திய சர்க்காரில் :		சென்னை சர்க்காரில் :	
சம்பளம்	ரூ. 55	சம்பளம்	ரூ. 45
பஞ்சப்படி	,, 50	பஞ்சப்படி	,, 22
ஆக	ரூ. 105	ஆக	ரூ. 67

'இது நியாயமா?'—என்று கேட்டு, டெல்லி சென்றுள்ளது என். ஜி. ஓ. தூதுக் குழு!

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம். சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.